உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமை ஊழியங்கள்

# கர்த்தரைத் துதித்தல் 1



Compiled by
P. Isaac Chandran

சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா.
சங்கீதம் 150:6

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.
சங்கீதம் 103:1

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.
சங்கீதம் 103:1,2

கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார், என் இருதயம் அவரை நம்பியிருந்தது, நான் சகாயம் பெற்றேன், ஆகையால் என் இருதயம் களிகூருகிறது, என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்.
சங்கீதம் 28:7

கர்த்தாவே, என் முழு இருதயத்தோடும் உம்மைத் துதிப்பேன், உம்முடைய அதிசயங்களையெல்லாம் விவரிப்பேன்.
சங்கீதம் 9:1

கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன், அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.
சங்கீதம் 34:1

ஜீவனைப்பார்க்கிலும் உமது கிருபை நல்லது, என் உதடுகள் உம்மைத் துதிக்கும்.

என் ஜீவனுள்ளமட்டும் நான் உம்மைத் துதித்து, உமது நாமத்தைச் சொல்லிக் கையெடுப்பேன்.
சங்கீதம் 63:3,4

என் ஆத்துமாவே, நீ ஏன் கலங்குகிறாய்? ஏன் எனக்குள் தியங்குகிறாய்? தேவனை நோக்கிக் காத்திரு, என் முகத்திற்கு இரட்சிப்பும் என் தேவனுமாயிருக்கிறவரை நான் இன்னும் துதிப்பேன்.
சங்கீதம் 42:11

நீர் உள்ளிந்திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர், என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர்.

நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.
சங்கீதம் 139:13,14

கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார், அவருடைய மகத்துவம் ஆராய்ந்து முடியாது.
சங்கீதம் 145:3

என் வாய் உமது துதியினாலும், நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.
சங்கீதம் 71:8

உம்முடைய நீதிநியாயங்களை நான் கற்றுக்கொள்ளும்போது, செம்மையான இருதயத்தால் உம்மைத் துதிப்பேன்.
சங்கீதம் 119:7

அவரை நோக்கி என் வாயினால் கூப்பிட்டேன், என் நாவினால் அவர் புகழப்பட்டார்.
சங்கீதம் 66:17

கர்த்தரைத் துதித்து, அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள், அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே பிரசித்தப்படுத்துங்கள்.
சங்கீதம் 105:1

ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி, உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்.
சங்கீதம் 145:1

தேவனை முன்னிட்டு அவருடைய வார்த்தையைப் புகழுவேன், தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன், மாம்சமானவன் எனக்கு என்ன செய்வான்?
சங்கீதம் 56:4

கர்த்தாவே, நீரே என் தேவன் உம்மை உயர்த்தி, உமது நாமத்தைத் துதிப்பேன், நீர் அதிசயமானவைகளைச் செய்தீர், உமது பூர்வ ஆலோசனைகள் சத்தியமும் உறுதியுமானவைகள்.
ஏசாயா 25:1

அக்காலத்திலே நீங்கள் சொல்வது: கர்த்தரைத் துதியுங்கள், அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்கள், அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்ளே அறிவியுங்கள், அவருடைய நாமம் உயர்ந்ததென்று பிரஸ்தாபம் பண்ணுங்கள்.
ஏசாயா 12:4

ஆம்! சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அவரே துதிக்குப் பாத்திரர். அதிசயமானவைகளைச் செய்கிறவர்.

கர்த்தர் பெரியவரும் மிகவும் புகழப்படத்தக்கவருமாயிருக்கிறார், ஜீவனைப்பார்க்கிலும் அவரது கிருபை நல்லது, நம் உதடுகள் எப்போதும் தேவனை துதிக்கட்டும்

**************************